MAALAI MALAR 23 AUG 09



திருப்பூரில் மரக்கன்று நடும் விழாவையொட்டி மாரத்தான் ஓட்டத்தை நடிகர் பிரகாஷ்ராஜ், நடிகை ஸ்ரேயா தொடங்கி வைத்தனர். இதற்காக அவர்கள் வந்த காட்சி.

### திருப்பூரில் ஈஷா யோகா மையம் சார்பில்

# ஒரே நாளில் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்படுகிறது

## மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

திருப்பூர், ஆக. 23–

திருப்பூரில் 25 ஆயிரம் மரக்கன்று நடும் விழாவை துணை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

**மரக்கன்றுகள் நடும் விழா**

ஈஷா அமைப்பின் பசுமை கரங்கள் திட்டம் சார்பில் ஒரே நாளில் திருப்பூரில் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் விழா இன்று நடந்தது. இதன் தொடக்க விழா திருப்பூர் டவுன்ஹால் மைதானத்தில் நடைபெற்றது.

விழாவுக்கு ஈஷா அறக்கட்டளை நிறுவனர் சத்குரு ஜக்கிவாசுதேவ் தலைமை தாங்கினார். தமிழக நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், உயர் கல்விதுறை அமைச்சர் பொன்முடி, ஊரகத் தொழில்துறை அமைச்சர் பொங்கலூர் பழனிசாமி, தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவிற்கு வந்தவர்களை ஈஷா கிராமப்புத்துணர்வு இயக்க திட்டக்குழு உறுப்பினர் மரபின் மைந்தன் முத்தையா வரவேற்றார்.

**மு.க.ஸ்டாலின்**

விழாவில் துணை முதல் – அமைச்சர் மு.க.ஸ்டாலின், கலந்து கொண்டு 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் விழாவை மரக்கன்று நட்டு தொடங்கி வைத்தார். திருப்பூர் மாவட்ட கலெக்டர் சமயமூர்த்தி, மாநகர மேயர் செல்வராஜ், கோவிந்தசாமி எம்.எல்.ஏ., துணை மேயர் செந்தில்குமார், மாநகராட்சி ஆணையாளர் ஜெயலட்சுமி, ஏற்றுமதியாளர் சங்க தலைவர் சக்திவேல், வளம் அமைப்பு தலைவர் கிருஷ்ணசாமி, சைமா தலைவர் ஈஸ்வரன், ஈஷா அவுட்ரெக் அறங்காவலர் பிரகலாத் கக்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழா முடிவில் துணை முதல்–அமைச்சர் ஸ்டாலின் நிருபர்களிடம் கூறும்போது ஈஷா மையம் செய்யும் பொதுநலப்பணி வரவேற்கதக்கது. மிகவும் பாராட்டுக்குரியது. இந்த பணி தற்போது அவசியமான ஒன்றாகும். அவர்கள் தொடர்ந்து இந்த பணியை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

இதைத்தொடர்ந்து பசுமை மாரத்தான் ஓட்டப்பந்தயம் நடைபெற்றது. ஓட்டப்பந்தயத்தை ஈஷாவின் பசுமை தூதுவர்கள் நடிகர் பிரகாஷ்ராஜ், நடிகை ஸ்ரேயா ஆகியோர் தொடங்கி வைத்தனர். மாலை 5 மணிக்கு திருப்பூர் வாலிபாளையம் ஹார்வி குமாரசாமி திருமண மண்டபத்தில் சத்குரு ஜக்கி வாசுதேவ் கடைசி மரக்கன்று நட்டு அருளுரை வழங்குகிறார்.